JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **240/2009** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 7** | Prosecution /Defence / Court | |
| Name | **Palaniyappan** | Caste | |
| Father's Name | **Arumuganainar** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | பெருந்துறை | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 20.05.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 2016 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2008 முதல் 2010 வரை சித்தோடு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 22.03.2009 ம் தேதி மாலை ஆறு மணிக்கு சித்தோடு காவல் நிலைய குற்ற எண் 85/2009 சட்டப்பிரிவு 392 இ.த.ச வழக்கில் சம்பந்தப்பட்ட பதிவு எண். HR 05 M 0071 மாருதி சென் கார் மற்றும் எதிரிகளை கண்டுபிடிக்க நான் காவல் பார்ட்டிகளுடன் சித்தோடு நால் ரோடு விஜி ஹோட்டல் முன்பு வாகன தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட மேற்படி பதிவு எண் கொண்ட கார் தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்த போது காரை நிறுத்த அதன் ஓட்டுநர் காரை நிறுத்தாமல் தப்ப எத்தணித்தகவர்களை பேரி கார்டு மூலம் தடுத்து சுற்றி வளைத்து பிடித்து அவர்களை விசாரிக்க நான் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த 1. பாலு என்கிற பாலுசாமி 2. வடிவேல் 3. மாரியப்பன் என்கிற ரவி டேனியல் 4. ரகு என்கிற முரளிக்குமார் ஆகியோர்கள் மேற்படி சித்தோடு காவல் நிலைய குற்ற எண். 85/2009 வழக்கின் சம்பந்தப்பட்வர்கள் எனத் தெரிய வந்ததது.

2. அவர்களை விசாரித்த போது அவர்கள் சித்தோடு ஈரோடு வடக்கு ஈரோடு தாலுக்கா பெருந்துறை கருமத்தம்பட்டி ஆகிய காவல் நிலையங்களில் கன்னக்களவு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிய வந்தது. 4 எதிரிகளையும் 18.15 மணிக்கு கைது செய்து 1 ம் எதிரி பாலு என்கிற பாலுசாமியை விசாரிக்க அவர் எந்த வித துன்புறுத்தலும் எந்த வித ஆசை வார்த்தைகள் இல்லாமல் தானாக முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மோகனசுந்தரம், விசுவநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் 4 பேர்களும் மேலே சொன்ன மாருதி சென் வாகனத்தில் திருட்டு வழக்குகளில் ஈடுபட்டதாக தெரியவந்தது. கடந்த 17.11.2008 ம் தேதி பகல் 12.00 மணிக்கு எதிரி 1 , 3, 4 ஆகியோர்கள் பெருந்துறை தென்றல் நகரில் ஒரு வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று கட்டிலுக்கு அடியில் உள்ள ரகசிய அறையை திறந்து உள்ளே இருந்த தங்க நெக்லஸ், தங்க செயின், கம்மல் மற்றும் மாட்டல், பணம் ரூ. 60,000 திருடியதாகவும் பிறகு அங்கிருந்து காரில் கோவை செல்லும் போது சுமார் 1.00 மணியளவில் விஜயமங்கலம் சக்தி நகரில் ஒரு வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று பீரோவில் இருந்த தங்க ஆரம், மோதிரம், தங்க செயின் மற்றும் பணம் ரூ. 3000 ஆகியவைகளை திருடியதாகவும் பிறகு பெருந்துறை மற்றும் விஜயமங்கலத்தில் திருடிய சொத்துக்களை எதிரி ரகு என்கிற முரளிதரன் அவருக்கு தெரிந்த கேரளாவைச் சேர்ந்த மணிகண்டன் என்பவரிடம் கொடுத்து ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வாங்கி அதனை எதிரிகள் மூன்று பேரும் பிரித்துக் கொண்டதாகவும் தன்னை கூட்டிக்கொண்டு சென்றால் திருடிய இடங்களை அடையாளம் காட்டி திருட்டு சொத்துக்களை கொடுத்த மணிகண்டன் என்பவரை அடையாளம் காட்டி வாங்கி தருவதாகவும் வாக்குமூலம் சொன்னார். **எதிரி பாலு என்கிற பாலுசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னிட்டு எதிரிகள் மாரியப்பன் என்கிற ரவி டேனியல், ரகு என்கிற முரளிக்குமார் ஆகியோர்களை விசாரித்து நான் தனித்தனியாக மேற்கொள்ள சாட்சிகள் முன்னிலையில் அவர்கள் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **எதிரி மாரியப்பன் என்கிற ரவி டேனியல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 9ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரகு என்கிற முரளிக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 10 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி பாலு என்கிற பாலுசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்ந்து ஒப்புதல வாக்குமூலம் அளித்தார்கள். எதிரி வடிவேல் என்பவரது வாக்குமூலத்தை மேற்கொள்ள சாட்சிகள் முன்னிலையில் அவர்கள் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சேலம் செவ்வாய்ப்பேட்டை சென்று ஈரோடு வடக்கு காவல் நிலைய குற்ற எண். 196/2008 ,398/2008, 858/2008, ஈரோடு தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்கள் 120/2008, 467/2008, வழக்குகளின் வழக்கு சொத்துக்களை அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சொத்துக்களை கைப்பற்றினேன். பின்னர் எதிரிகள் நால்வரையும் நிலையம் கொண்டு வந்து அடைப்புக் காவல் தயார் செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

4. அதன் பின்னர் 31.03.2009 ம் தேதி இவ்வழக்கின் தொடர் விசாரணை மேற்கொண்டு நீதித்துறை நடுவர் எண். 3 ஈரோடு நீதிமன்றத்தில் எதிரிகள் 1,3,4 ஆகியோர்களை போலீஸ் காவலில் எடுப்பதற்கு மனு தாக்கல் செய்து அவர்கள் மூவரையும் போலீஸ் காவலில் எடுத்தேன். பிறகு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 01.04.2009 ம் தேதி காலை 9.00 மணிக்கு சாட்சி விவேகானந்தன், மகேந்திரன் மற்றும் எதிரிகள் 1,3,4 ஆகியோர்கள் உடன் கேரளா மாநிலம், பாலக்கோடு கொட்டங்கோடு என்ற இடத்தில் மணிகண்டனை அவரது வீட்டில் எதிரிகள் அடையாளம் காட்ட பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 1082/2008 சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்கள் 1. பச்சை கல் ஆரம் 2. பச்சை கல் தோடு ஒரு ஜோடி, 3. தங்க மோதிரம் ஒன்று, 4. கோதுமை தங்க செயின் ஒன்று, 5. G.D பொறித்த தங்க மோதிரம், 6. பச்சை கல் தங்க மோதிரம் , 7. மூ.ச எழுத்து பொறிக்கப்பட்ட தங்க மோதிரம் ஒன்று ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** மேலும் பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 1083/2008 சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்களையும் மேறபடி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். பிறகு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து படிவம் 91 மூலம் இந்த

வழக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்களை பெருந்துறை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். இது தொடர்பாக பெருந்துறை காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கைரேகை நிபுணரிடமிருந்து ஏதேனும் அறிக்கை பெற்றேனா என்றால் சித்தோடு காவல் நிலைய வழக்கு கோப்புகளை பார்த்தால் தான் தெரியும். கைரேகை நிபுணர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டால் அதற்கான அறிக்கை கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்த வரையில் கைரேகை நிபுணரிடம் எந்த வாக்குமூலம் பெறவில்லை என்றால் நான் இந்த வழக்கில் எதிரிகளை கைது செய்து வழக்குச் சொத்துகளை கைப்பற்றி மட்டும் உள்ளேன் அதனால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்திலும், சொன்ன இடத்திலும், சொன்ன விதத்திலும் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை